சிறந்தமுறையில் குறுகிய காலத்தில் தரமான தெளிவான கலர் படப் பிடிப்புகளுக்கு நாடுங்கள்

**சென்றல் ஸ்ரூடியோ**

மாம்பழம் சந்தி, அரியாலை

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 89 சனி 05-05-1990 (சித்திரை 22) ஷவ்வால் 09

கறுப்பு வெள்ளை, பாஸ்போட், அடையாளஅட்டைப் படங்களும், புளக் போன்றவற்றிற்கும் நாடுங்கள்

**சென்றல் ஸ்ரூடியோ**

மாம்பழம் சந்தி, அரியாலை

## தமிழ் இளைஞர் புதைத்து வைத்த 250 கி. வெடி மருந்து தமிழக கடற்கரையில் பொலிஸார் மீட்பு

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையோரக் கிராமம் ஒன்றுலிருந்து 250 கிலோ வெடிமருந்துகள் தமிழக பொலிஸாரினால் நேற்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த வெடி மருந்துகள் பிளாஸ்டிக் பைகளினால் மூடப்பட்டு கொள்கலன்களில் கடற்கரையோரமாகப் புதைத்து வைக்கப்பட்டிருந்தது, சில மாதங்களின் முன் இப்பகுதிக்கு அருகில் இருந்தே பெருமளவு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வெடிமருந்துகளை இலங்கைக்கு கொண்டு செல்லவே சில தமிழ் தீவிரவாத இயக்கங்கள் இவற்றை மறைத்து வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# 60 வயது மூதாட்டி செட்டிகுளத்தில்

# நீராகாரம் ஏதுமின்றி சாகும்வரை உண்ணாவிரதம்

### எட்டு நாட்களாக ஜீவமரணப் போராட்டம்

செட்டிகுளத்தில் 60 வயதான மூதாட்டி நீர் ஆகாரம் எதுவுமின்றி சாகும்வரை உண்ணாவிரதத்தினை ஆரம்பித்துள்ளார்.

கடந்த மாதம் 28-ம் திகதி இவரது உண்ணாவிரதம் ஆரம்பமானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன,

சந்தாப்பிள்ளை திரேசம்மா என்ற மூதாட்டியே இந்த உண்ணாவிரதத்தினை தனது வீட்டில் தொடங்கியுள்ளார். இவருக்கு 6 பிள்ளைகள் உண்டு.

இவரது உண்ணாவிரத நோக்கம் பற்றி விடயம் அறிந்த வட்டாரங்கள் மூலம்

—8ம் பக்கம் பார்க்க

## வாகன நெருக்கடி தீர ஒரு பக்கம் மட்டும் நிறுத்தம்

யாழ் ஸ்ரான்லி வீதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்காக புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வரவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு தினமும் மாறி மாறி இடது வலது பக்கங்களாக வாகனங்கள் நிறுத்தப்படவுள்ளன.

ஒரு பக்கமாக வாகனங்கள் நிறுத்தப்படுவது தொடர்பாக அதிகாரிகள் கவனிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். (03)

### பனை அபிவிருத்திச்சபை தலைவர் புலிகளுக்கு நன்றி

## கசிப்பு, சட்டவிரோத மதுவை விற்பது தடுக்க ஊழியர் நியமனம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பனைவளத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் நலனை மனத்திற் கொண்டு ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கத்திற்கும் இரு ஊழியர்களை நியமித்துக் கசிப்பு, சட்டவிரோத மது விற்பனை போன்ற விடயங்களைத்தடை செய்ய முன்வந்தமைக்கு அனைவரின் சார்பிலும் நன்றியை விடுதலைப் புலிகள்

... 8ஆம் பக்கம் பார்க்க

### கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை

## ஆசிரியர் சுயவிபரக் கோவை கவனமாகப் பாதுகாக்கப்படும்

யாழ். மாவட்ட ஆசிரியர்களது சுய விபரக்கோவைகள் யாவும் பாதுகாக்கப்படுமென யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

எந்தக் காரணத்திற்காகவும் சுயவிபரக் கோவையில் உள்ள ஆவணங்களை எவரும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

8 — ஆம் பக்கம் பார்க்க

## உணவு முத்திரைப் பொருட்கள் விநியோகத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் தரக்குறைவு, விலைஉயர்வு

யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையான மக்கள் உணவு முத்திரை பெறுபவர்களாகவும், ஜனசக்தி முத்திரைபெறுபவர்களாகவும் இருக்கின்றார்கள். இம்முத்திரைகளுக்கென யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத்தின் மூலமே பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் பொருட்களின் விலை, வெளிச் சந்தை விலையினை விடக் கூடுதலாக இருப்பதுடன், தரத்திலும் குறைந்தவையா

— 8ஆம் பக்கம் பார்க்க

## நிதியுதவிக்கு ஜப்பான் மௌனம்

ஜப்பானியப் பிரதமரின் இலங்கை விஜயத்தில் ஜப்பானிய அரசினால் இலங்கைக்கு நிதி உதவி ஏதும் வழங்கப்படுவது தொடர்பாக எதுவித அறிவித்தலும் விடுக்கப்படவில்லை.

முன்னர் ஜப்பானியப் பிரதமரின் விஜயத்தில் ஜப்பானின் இலங்கைக்கான நிதியுதவி ஏதும் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரசபைக்கு வட - கிழக்கிலிருந்து 10 கோடிரூபா மின்நிலுவை - விலக்களிக்கக் கோரிக்கை

கடந்த காலங்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலவிய தீவிரவாத நடவடிக்கைகளினால் மின்சார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணம் செலுத்தப்பட முடியாத நிலையிலுள்ளது.

எனவே இதற்கான நிலுவைக்கு விலக்களிக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண சபை அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

கடந்த காலங்களில் வடபகுதிக்கான மின்சார இணைப்புக்கள் மின்சார விநியோக உப நிலையங்கள் என்பன சேதமாக்கப் பட்டு மின் சார விநியோகம் சீர் குலைக்கப்பட்டிருந்ததெனினும்,

மின்சாரத்திற்காக கட்டணம் அறவிடப்படவில்லை என்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகள் இலங்கை மின்சார சபை

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## நாளைய கொடுப்பனவுகள்

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையின் மீளக் குடியமர்த்தலுக்கான ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவுகள் நாளைய தினம் வழங்கப்படவுள்ளது.

கரணவாய் மேற்கு கரணவாய், வடக்கு கரணவாய் தெற்கு கரணவாய் கிழக்கு

— 8ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர்கள் போடும் லீவு

யாழ். மாவட்டத்தில் உள்ள பல ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்திற்கு செல்வதாகக்கூறி சொந்த அலுவல்களில் ஈடுபட்டுவருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தடுப்பதற்காக புதிய நடைமுறை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. கல்வித்திணைக்களத்திற்கு வரும் அதிபர், ஆசிரியர்களது நேரங்கள் வருவதற்கான காரணம் என்பன பதியப்படவுள்ளன. (03)

### இன்று ஓவியக்கண்காட்சி

## மே தின ஊர்திகளுக்கு இன்று பரிசுகள் வழங்கப்படும்

இன்று காலை ஒன்பது மணியில் இருந்து மாலை நான்கு மணிவரை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஒவியக் கண்காட்சி ஒன்றை விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியினர் நடாத்துகின்றனர். வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

இதே சமயம் மே தினத்தில் பங்குபற்றிய ஊர்திகளுக்கான பரிசில்களும் இன்று யாழ் மத்திய கல்லூரியில் வழங்கப்படும் அவற்றின் விபரம் வருமாறு

— 8 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே

### தலைவலி

உங்களுக்கு அடிக்கடி தலைவலி வருகிறதா? மாத்திரையை எடுக்கு முன்னர் தலைவலியைப் பற்றி சற்று அறிந்து கொள்ளுங்கள்.

'பிளக்கும் தலைவலி விளக்கும் உண்மைகள்' உடலியல் கட்டுரை

— 3 ஆம் பக்கத்தில்

வட-இலங்கை மருத்துவக் கல்லூரி:

# சிக்கல் அகல்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

''வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவரின் பிரச்சினையைத் தீர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது'' என்று கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு.லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்

''இக் கல்லூரியில் தமது மருத்துவக் கல்வியைத் தொடர்வதில் எதிர் நோக்கும் பிரச்சினையைத் தீர்த்து வைக்க நான் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன்' என்று சொன்ன அவர், மாணவர்களின் கல்வி இடையில் தடைப்படக் கூடாது என்பதில் நான் அதிக கரிசனையுடன் இருக்கிறேன் என்றும் குறிப்பிட்டார்.

இக் கல்லூரியைச் சேர்ந்த 82 மாணவர்கள் சார்பிலான குழு ஒன்று அமைச்சரைச் சந்தித்துப் பேசியபோதே மேற்கண்டவாறு அமைச்சர் கூறினார்.

# ஒருவருக்கு கிடைக்கின்ற மகிழ்ச்சி இறைவன் சித்தமே

## - கங்கை அமரன் நெகிழ்ச்சிக் கருத்து

'ஒருவருக்குக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி அது இறைவன் சித்தம்' என்று பிரபல தமிழக இசையமைப்பாளரான கங்கை அமரன் தமிழகம் புறப்படுமுன் கொழும்பில் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

மேதின விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு இவர் தலைமையில் இலங்கை வந்திருந்த இசைக் குழுவினர் நேற்று முன்தினம் தமிழகம் பயணமாகினர்.

இந்த இசைக் குழுவில் பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பாடகி சித்ரா, சுரேந்தர் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

திரு. கங்கை அமரன் மேலும் சொன்னதாவது: 'ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு நேரத்தை இறைவன் பகிர்ந்துள்ளான் அதில் உயரும் நேரம், தாழும் நேரம், மக்கள் மத்தியில் புகழ்பெறும் நேரம் என்றெல்லாம் பல வகைகள் உண்டு.

ஒவ்வொருவனுக்கும் அமையும் நேரப்படியே அவன் வாழ்வு அமையும். மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வேண்டும் எனும் நேரம் வரும் பொது அவன்நிச் சயம்புகழ் பெறுவான்.இறைவன்தரும்சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மொத்தத்தில் யாவும் இறைவன் சித்தமே என்றார்.

# குடாநாட்டில் வெற்றிலைவிலை பெருமளவில் வீழ்ச்சி

(தெல்லிப்பழை)

வெற்றிலையின் விலை மூன்னொருபோதும்இல்லாதவாறு தற்போது குறைவாக காணப்படுகிறது. முன்னர் 1000 வெற்றிலை 80 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது சுன்னாகம் சந்தையில் வெற்றிலையின் விலை 30 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில் வலிகாமம் பகுதி வெற்றிலை பயிர் செய்கையாளர் விரத்தி அடைந்துள்ளனர். இதற்கு கொழும்பு வெற்றிலை வட.பகுதிக்கு அதிக அளவில் வருவதே காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (15)

## மின்தடை

(நாயன்மார்கட்டு)

யாழ்மாநகரப் பகுதியிலுள்ள வேலப்பர்வீதி மூத்திவநாயகர்வீதி.கலைமகள்வீதி பூமகள் வீதி ஆகியபகுகளில் அடிக்கடி மின்தடைகள்ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ப்து

## சாரண ஆசிரியர் பயிற்சி

சாரண ஆசிரியர்களாக நியமனம் பெற விரும்புவோர்க்கான முதற் கட்ட பயிற்சி ஒன்று மூன்று தினங்களாக மாவை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெற்றது.

சாரண அனுபவத்தை அளிக்கும் இவ் ஆரம்ப பயிற்சியைப் பெறுபவர் ஒரு சாரணர் அல்லது குருளைச் குழுவினை ஆரம்பிக்கவோ வழி நடத்தவோ வேண்டிய அறிவினைப் பெறக் கூடியதாகவுள்ளது.

சிரேஷ்ட சாரணர்களுக்கான அதி, உயர் பயிற்சியும் இங்கு நடை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## அங்கர் விலை மேலும் குறைப்பு

அங்கர் பால்மா மேலும் விலை குறைக்கப்பட்டுள்ளது முன்பு 46ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த அங்கர் பக்கட் தற்போது 44.60 சதமாக குறைக்கப்பட்டுள்ளது.


## பிறந்தநாள் வாழ்த்து




★ செல்வன் வி. பாலரஞ்சன் ★

வல்வெட்டித்துறை A. G. A. ஒழுங்கையைச் சேர்ந்த வினாயகமூர்த்தி ரஞ்சிதாரமணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பாலரஞ்சன் இன்று 5. 5. 90 தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமரிசையாக தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை ஐயா, அம்மா, அக்கா, யாழினிஅக்கா, தர்சினி அப்பாமார், அப்பாச்சி, அம்மாச்சி மாமாமார், மாமிமார், பெரியையாமார்,பெரியம்மாமார்,பவாச்சித்தப்பாமார், சித்தி அன்ரிமார், ஐயையாமார், கண்ணன்மாமா, பாப்பா அன்ரி, அண்ணன்மார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார், மற்றும் நண்பர்கள் உறவினர்கள், அனைவரும் நெடியம்பதியான் அருள்பெற்று பலகலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

05018

சிறு விளம்பரம்

புத்தகம்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II கரப்பான் தேரை விளக்க படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கர் ஐயர்B. S. C வெளியீட்டு, விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 05032


திருகோணமலையில்

# உணவு முத்திரை பெறும் விதத்தில் புதிய நடைமுறை

பயிலுநர் ஆசிரியர்களாக திருகோணமலை மாவட்டத்தில் நியமனம் பெற்றவர்களின் குடும்பங்களின்உணவு முத்திரைகள் ரத்துச்செம்யப்பட்டுள்ளன.

புதிய உணவு முத்திரை விநியோகம் தற்பொழுது இம்மாவட்டத்தில் நடைபெற்றுகின்றது,

இதேவேளை கடந்த மாதம் 7 ஆம் திகதி நியமனம் பெற்ற மேற்படி பயிலுநர் ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம்

வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்தகால இன்னல் களினால் பாதிக்கப்பட்டு அகதிகளான அனாதைகளான துணையிழந்த, ஊனமுற்ற இடம்பெயர்ந்த வடக்குக் கிழக்கு மக்கள் இன்று புதிய வாழ்வைத் தேடும் நிலையில் அவர்களிற்குவேண்டிய உதவிகள், ஒத்துழைப்புக்களைக் கொடுக்க வேண்டியது. எம் ஒவ்வொருவரின் கடமை மட்டுமல்ல எமது பண்பாடும்கூட.

பாதிக்கப்பட்ட எமது மக்களிற்கு புனர்வாழ்வு அளிப்பதும் சேதமாக்கப்பட்ட எமது பிரதேசத்தைப் புனர் நிர்மாணம் செய்து அபிவிருத்தி செய்வதும் இன்றைய எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது.

ஏற்கனவே பல பொது ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் இவ்வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் புனர்வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தவும், உண்மையாக உதவி தேவைப்படும் சகலருக்கும் அவை சென்றடையச் செய்யும் நோக்கத்துடனும் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகம் ஆரப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாம் இவ்வேலைகளை மிகத்துரிதமாகவும், திறமையாகவும், பிழையின்றியும் செய்வதற்கு பொது மக்கள் பொது ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் அனைவரினது உதவியையும் ஆள், ஆலோசனை,பொருள், நிதி போன்ற சகல வழிகளிலும் எதிர்பரர்க்கிறோம் எவ்விதத்திலும் உதவி புரிய விரும்புவோர் 157/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள வடக்குக் கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆட்சேர்ப்பு பரீட்சை

(மூளாய்)

இலங்கை கடல் கடந்த சேவையின் IVஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை கொழும்பில் 21. 07 90 இல் நடைபெறவுள்ளது. (ப-1)

## சுட்டெண்

ஏப்ரல் மாத வாழ்க்கைச் செலவு சுட்டெண் 677.9 எனப்புள்ளி விவர இலக்கம் தெரிவித்துள்ளது.


## அறிவித்தல்

சகல வசதிக்கட்டண தொண்டர் ஆசிரியகர்ளையும் விண்ணப்பித்த அத்தாட்சிப் பத்திரங்களுடனும் சேவை விபரம் அடங்கிய கல்வித்தரா தர அடையாள அட்டை, அத்தாட்சிப்பத்திரங்களுடனும் யாழ். நல்லூர் கந்தன் ஆலயத்தில் 06. 05.1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சமூகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

S. V Vickramasingham
Manipay Hindu
Manipay

எஸ். வி. விக்ரமசிங்கம்
தலைவர். யாழ். பிராந்தியம்
மானி. இந்துக்கல்லூரி.
05057

கிளிநொச்சி கச்சேரி

## கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக் கச்சேரி கேள்விச் சபைத் தலைவரால், கிளிநொச்சிக் கச்சேரி பெண் ஊழியர்களுக்கான விடுதி அமைத்தலுக்கு கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1990.04.21ஆம் திகதி பத்திரிகைகள் மூலம் என்னால் கோரப்பட்டன. இவ் வேலைகளுக்கான கேள்விகளின் முடிவு திகதி 1990ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென அறியத்தருகின்றேன்.

இவ் வேலைக்குரிய கேள்விப்பத்திரப் படிவங்களை மீளப் பெறக்கூடியதும், மீளப் பெற முடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990.05.18ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்,
திணைக்கள கேள்விச் சபைத் தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும், அரசாங்க
அதிபரும், கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி, கிளிநொச்சி,
05.05.1990

05002

# எல்லையில் தொல்லை எல்லை இல்லை

வடக்கில் இன்று தமிழ் மக்கள் ஓரளவு பிரச்சினைகளிலிருந்து விடுபட்டவர்களாகவே உள்ளனர்.

ஆனால், கிழக்கில் இப்போதுதான் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம் என்பதுபோல் காரியங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

கிழக்கின் இன்றைய எரியும் பிரச்சினைகளில் மிகவும் முக்கியமானவை குடியேற்றமும், பாதுகாப்புமாகும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் இன்னமும் தொடர்ந்து கொண்டுதானுள்ளன.

இதே சமயம் அவர்களுக்குப் பாதுகாப்புக்கும், தமிழர்களை அச்சுறுத்தி வெளியேற்றவும் சிங்களப்படையினர் குவிக்கப்படுகின்றனர்.

எமது எல்லைப்பிரதேசம் படிப்படியாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றது.

எல்லையில் வாழும் தமிழர்களுக்குள்ள தொல்லைகளுக்கு எல்லையே இல்லை.

அம்பாறை, திருமலை மாவட்டங்களில் குடியேற்றம் என்ற பெயரில் எல்லை பறிமுதல் செய்யப்பட்டது போல், தற்போது மட்டக்களப்பிலேயே கைவைக்கும் அளவிற்கு அரசு நிர்வாகம் துணிந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமம் தான் கெவிளியாமடு.

இங்கு அண்மையில் நேரடியாகச் சென்று வந்த எமது மட்டு நிருபரின் அனுபவங்கள் முரசொலி மூலம் (30.4.90) மக்களை அதிர்ச்சியடைய வைத்தது.

1965 க்குப்பின் ஐந்து வன்செயல்களில் பாதிக்கப்பட்ட இக்கிராம மக்கள் இன்று வரை அகதிகளாகவே உள்ளனர்.

250 குடும்பங்களும் மாவடிக் கிராமத்தில் ஓர் இடிந்தகட்டடத்தில்தங்கியுள்ளனர்.

இவர்கள் தமது உறவுகள், உடமைகளை இழந்து அகதிகளாகவுள்ளபோதும் இவர்களுக்கு அரசு எந்தவித நிவாரணத்தையும் வழங்க முன்வரவில்லை.

இவர்களை மீளவும் இவர்களது பிரதேசத்தில் குடியேற்ற ஒழுங்குகளும் செய்யவில்லை.

மாறாக இவர்களது தாயக பூமியில் சிங்களவர்களைக் குடியேற்றி, இவர்களது நிலத்தில் பயிர் செய்ய உதவிகள் செய்துள்ளது.

இவர்களுக்குப் பாதுகாப்பாகத் தமிழ் பாடசாலை ஒன்றில் சிங்கள இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு, உடமைகள் கொள்ளையிடப்பட்ட நிலையில், அதே இடத்தில் வீடமைப்பு அதிகார சபையால் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்புப் பிரதேசத்தில், மட்டு அரச அதிபரின் அனுமதியின்றி அம்பாறை அரச அதிபர் வீடுகளைச் சிங்களவர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ளார்.

இதிலிருந்து அரச நிர்வாக மட்டத்தில் திட்டமிடப்பட்டு, துணிந்து இவ்வகைக் குடியேற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது புரிகிறது.

இந் நிலை நீடிக்குமாயின் வட கிழக்கின் பெரும் பகுதியை மிக விரைவில் இழந்து விடுவோம்.

ஏற்கனவே திருமலையில் 25 வீத சிங்களவரின் குடியேற்றத்தால் ஐம்பது வீத நிலத்தை இழந்துள்ளோம்.

சிங்களக் குடியேற்றங்களுக்கு உறு துணையாக, பலமாக இருப்பது அரச இராணுவ பாதுகாப்பே.

சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவும், அடாத்தான குடியேற்றவாசிகளை அப்புறப் படுத்தவும் முதலில் தமிழ் மக்களிடம் ஆயுதப்படை ஒன்று அவசியமாகும்.

எல்லையில் தொல்லைகள் நீங்க வேண்டுமாயின் எல்லையில் தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்பைப் போராளிகள் பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

## இதயநாதம்

சனிக்கிழமை 5-05-990

### நல்வாக்கு

அறிவு மனிதனை விடுதலை செய்யும்.

-கார்க்கி

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

---

உங்கள்உடல் நிலையை நீங்களே அறிந்துகொள்ளுங்கள்

# பிளக்கும் தலைவலி

# விளக்கும் உண்மைகள்

நீங்கள்புத்திக்கூர்மையுள்ள பேராவல்கொண்ட, மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட, மற்றவர்களால் மதிக்கப்படுகின்ற கவர்ச்சியுள்ள நபரா? இயல்பிலேயே, ஒருவேளை எதையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அடையமுடியாத இலக்குகளை வைத்துக் கொண்டு திணறும் தன்மையுடையவ ராயிருக்கின்றீரா?

மருத்துவப் பரிசோதனைக்காக நீங்கள் சென்றிருந்த போது, ''உங்களுக்கு வியாதியே இல்லை!'' என்று டாக்டர் உங்களிடத்தில் கூறியிருக்கிறாரா? ''டாக்டர் நீங்கள் இப்படித்தான் சொல்லுவீர்கள் என்று பயந்தேன், ஆனால் இத்தகைய பயங்கரமான வலிகளை நான் ஒன்றும் கற்பனை செய்துகொண்டிருக்கவில்லை'' என்று கைவிடப்பட்ட நிலையில் சொல்லுகின்றீர்களா?

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு உங்களது விடை ''ஆம்'' என்று இருக்குமானால், கடும் வேதனையால் துன்பம் அனுபவித்துக் கொண்டு, இயலாத நிலையில் உலகில் நடமாடிக்கொண்டிருக்கும் ஒன்றரை கோடி தலைவலிக்காரர்களில் நீங்களும் ஒருவர். அதாவது, நீங்கள் கண் பார்வையையும் மழுங்கடிக்கும் கொடிய தலைவலியால் அவதிப்படுகிறீர்கள் என்பது தெரிகிறது.

மருத்துவ முறையில் தலைவலிக்கு சுமார் இருநூறு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தலைவலி, வரப்போகும் பக்கவாதத்தையோ, மூளைக் கட்டியையோ பற்றி முன்னுரைக்கலாம். பாதிக்கப்பட்டவர் கற்பனை செய்கின்றபடி இவ்வாறு பொதுவாக நிகழாமலும் இருக்கலாம். கண் வேதனையினாலோ அல்லது சைனஸ் தொல்லையினாலோ கூடத் தலைவலி வரலாம். ஒற்றைத்தலைவலி மரபுவழித் தொடர்பிலே வரும் வியாதி, என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒற்றைத்தலைவலி வழக்கமாக இளைஞர்களையும், நடு வயதினரையுமே பாதிக்கின்றது. ஹிஸ்டாமைன் போன்ற வேதியியல் பொருள்களை அதிகம் எடுப்பதால் முதியவர்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றார்கள்.

அவதிப்படும் ஆயிரக்கணக்கான தலைவலிக்காரர்களுக்கு, மருந்துகள் மற்றும் கழுத்தை நிமிர்த்தும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு, வெற்றிகரமான முறையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. பயங்கரமான முறையில் பாதிக்கப்பட்ட தலைவலிக்காரர்களுக்கு, நெருக்கடியான கட்டங்களில் இன்ட்ராவீனஸ் இஞ்செக்ஷன்கள் கொடுக்கப்படுகின்றன. எனினும், இச்சிகிச்சைகள், தாக்கத்தினின்று உடனே நிவாரணமளித்தாலும் எதிர்காலத்திலும் தலைவலிகளைத்தடுத்து நிறுத்திவிடும் என்று கூறிவிட முடியாது.

மேலும், நாட்பட்ட தலைவலிக்காரர்களுக்கு இனி அடுத்த முறை தலைவலி எப்பொழுது தாக்கும் என்பதும் தெரியாத ஒன்றாகும். இந்நிலை அவர்களது வாழ்க்கையைத் துயரத்தில் ஆழ்த்தும் ஒன்றாகும்.

இன்று தலைவலி, வரப்போவதைத் தடுப்பது எப்படி என்பதைக் கண்டறிவதே ஆராய்ச்சியாளர்களின் நோக்கமாகும்.

சுருங்கக்கூறுமிடத்து, அணுகுமுறை இதுவே. அதாவது, நீங்கள் நீண்ட நாட்களாகத் துன்பம் அனுபவித்து வருபவரானால், தலைவலியைப் பெற்றுக்கொள்வதை ஒரு பழக்கமாக ஆக்கிக்கொண்டு விட்டீர்கள். இதன் பொருள் என்னவென்றால், உங்களை அறியாமலேயே நீங்கள், தலைவலியைப் பெற்றுக் கொள்ளும் பாங்கிற்கு ஏற்றபடி, உங்களது தசைகளும், திசுக்களும் எதிர்ச் செயலாற்றும்படி பயிற்சி அளித்திருக்கிறீர்கள்.

ஆரம்பத்தில் இவ்வாறு கட்டுப்படுத்தப்படவில்லை. ஆனால், நீங்கள் அடிக்கடி தலைவலியால் தாக்கப்பட்ட பொழுது இத் தலைவலிகள் தொடர்ந்து பெற்றுக் கொண்ட பயிற்சிகளினால் பூரணமடைந்து துரிதமாக எதிர்ச்செயலாற்றஆரம்பித்து விட்டன.

> **நமக்குத் தலைவலி வந்துவிட்டால நம் நினைவுக்கு முதலில வருவது மாத்திரையே அடிக்கடி தலைவலி நம்மைப்பற்றிக் கொள்வகற்குக் காரணம் என்ன? தலைவலியை மாத்திரைகளின்றி சமாளிக்க முடியாதா? கட்டுரையைப் படியுங்கள்- விளக்கம் பிறக்கும்.**

இந்த கெட்ட பழக்கத்தை உங்களை அறியாமலேயே நீங்கள் வளர்த்துவிட்டீர்கள். 'நீங்களே' காரணமாக இருப்பதால், வேறு எந்த மாத்திரைகளையோ சிறந்த மருத்துவ சிகிச்சைகளையோ பரிந்துரை செய்வதில் பயனில்லை.

சிகிச்சை என்னவென்பதைச் சுருக்கமாக கவனிப்போம். நல்ல மருத்துவ பரிசோதனை ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும். எக்ஸ்ரே எடுக்கப்பட வேண்டும். இரத்தமும் சிறுநீரும் சோதிக்கப்படவேண்டும். ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாடு பற்றிய ஆய்வுகளும் நடத்தப்பட்டு, இறுதியில் உடலிலுள்ள கோளாறு ஏதாவது தலைவலிக்குக் காரணமாக இருக்கிறதாவெனக் கண்டறியவேண்டும். எல்லாக் கேஸ்களிலும் தலைவலி ஒரு நோய்க் குறியே, வியாதியல்ல என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

அடுத்தாற்போல், சோதிக்கும் மருத்துவர் நோயாளியை நோக்கி, 'நீங்கள் நலமடைய வேண்டுமென்று எவ்வளவு விரும்புகின்றீர்கள்? உண்மையிலேயே குணமடைய வேண்டுமென்று ஆசிக்கிறீர்களா? அல்லது நீங்கள் தலைவலியால் படும் அவதியைப் பார்த்து சலித்துப் போன உங்கள்கணவர்(மனைவி) அனுப்பி வைத்ததால் வந்திருக்கிறீர்களா?' என மொட்டையாகக் கேட்கலாம்.

ஏதோ வலியகற்றும் மாத்திரையைப் பெற்றுக்கொண்டு வெளியேறப்போகிறோம் என நம்பிக்கையோடு வரும்நோயாளிகளுக்கு அதைரியமூட்டத் தக்கதாக, இத்தகைய அணுகுமுறை அவசியமாகின்றது. தலையல்ல அவர்களது பிரச்சனை! ஏற்ற நேரத்திற்கு ஏதோ ஒரு சிகிச்சை, உடல் முழுவதற்கும் தேவை, அது தான் காரணம்!

இதைச் சற்று விளக்கிக் கூறுகின்றேன். சில சந்தர்ப்பங்களில் எவ்வாறு மிதமிஞ்சி எதிர்ச்செயல் புரிய வேண்டுமென்பதை உடலின் தசைகளும் நன்றாகவே கற்றுவைத்திருக்கின்றன. சிலருக்கு, இந்த எதிர்விளைவு வயிற்றிலே அல்சராக (புண்) வெளிப்படலாம், சிலர் பக்கவாதம் அல்லது இதயத்தாக்கால் பாதிக்கப்படலாம். வேறு சிலர் தலைவலியைப் பெற்றுக்கொள்ளலாம்!

நாம் அன்றாட உபயோகத்திற்கு வேண்டிய சக்தியை உடலில் சேமித்து வைத்திருக்கிறோம். சமநிலையோடு நாள் முழுவதும் சக்தியைச் செலவிடுவோமானால், நாளின் இறுதியில் சிறிதளவு அல்லது கணிசமான அளவில் சக்தியை மீதம் வைத்திருப்போம்.

சக்தி நிறைந்த ஒரு பை உங்களது உடலில் இருப்பதாகக்கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்களது வயது இருபத்தைந்தாக இருக்குமானால், கேடு விளைவிக்கும் எந்தவிதமான வியாதியும் இல்லாதிருக்குமானால், நன்றாக நித்திரையும் பெற்றுக்கொள்வீர்களானால், காலையில் உங்களது பை நிறைய சக்தியோடு விழித்தெழுவீர்கள். நாள் முழுவதும் எண்ணாமல் நிகழ்கின்ற அறிந்து செய்கின்ற காரியங்களுக்காக சக்தியின் ஒருபகுதி செலவிடப்படுகின்றது.

அந்த நாளில் நீங்கள் வாழ்ந்த வாழ்வு பையின் சக்தியைப் பாதியாக்கி விடுகிறது. இன்னும் முக்கியமான சில காரியங்களுக்காக 50 பவுண்டு சக்தி மீதமாக வைக்கப்படுகிறது.

நம்மில் அநேகர் இதன் உண்மையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் காரியங்களில் துரித கதியில் இயங்கி உணர்ச்சி வசப்பட்டும் பதட்டத்தோடும் மன இறுக்கத்தோடும் நடந்து சக்தியை வீணடிக்கிறோம். பெரும்பாலும் மதியின்றி சக்தியை இழந்து விடுகிறோம்.

மாலைவேளையில் பையில் மீந்திருக்கும் 5 அல்லது 10 பவுண்டு சக்தியோடு வெளியே செல்கின்றோம். படுக்கைக்குச் செல்லும்போது நம்மை அறியாமலேயே மிகவும் களைப்படைந்தவர்களாக 110 பவுண்டு சக்தியை செலவிட்டவர்களாக நமக்கே நாம் கடனாளியாகிவிடுகிறோம்.

வாங்க வாங்க கடன் ஏறிக் கொண்டு போவதுபோல், இதுவும் கிறுகிறுப்பை வரவழைக்கும் நிலைக்கு உச்சத்தையடைகிறது. ஏற்கனவே அடுத்த நாளின் சக்தியில் 10 பவுண்டைக் கடனாகப் பெற்றுக் கொண்டதினால், அந் நபர் இரவில் ஆழ்ந்த நித்திரைக்குப்பின் தமது பையில் 90 பவுண்டுகளை மாத்திரமே வைத்திருக்கிறார்.

ஆனால் முந்திய தினத்தில் அதிகக் களைப்போடு வீடு வந்து சேர்ந்தமையால், அவர் சரியாக தூங்கவில்லை, எனவே, 90 பவுண்டிற்கும் குறைவான சக்தியோடுவிழித்தெழுகிறார், மீண்டும் அந்த நாளில் 100 பவுண்டு சத்தியைச் செலவிடுகிறார்.

இழந்துவிட்ட ஒரு பவுண்டு சக்தி ஒரு பவுண்டு மன அழுத்தமாக அல்லது ஒரு பவுண்டு சாம்பலாக பையில் விழுகின்றது. ஒரு மாதத்திற்குள் பை சக்தியால் நிறையாமல், சாம்பலால் அதிகமாக நிரம்பி விடுகிறது. அடுத்து நாளில் என்ன செய்யவேண்டுமென்று திட்டமிட்டாலும் அது சக்திக்கு மிஞ்சியதாகவே போய் விடுகிறது.

தலைலியால் அவதிப்படும் அநேகர் தங்களுக்குத் தாங்களே சக்தியில் 'கடன்பட்டவர்களாகவே நீண்ட காலம் வாழ்கின்றனர். ஒருவேளை

7 ஆம் பக்கம் பார்க்க

# செய்தி மஞ்சரி

## சுகாதார வசதி ஏற்பாடு

கடந்த காலத்தில் இடம் பெற்ற அனர்த்தங்களினால் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்க வலி வடக்கு பகுதியால் கிராமிய மட்டத்தில் ஆய்வுகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

மருத்துவ மாது தலைமையில் கிராமியத் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று இவ் ஆய்வினை மேற் கொள்வதோடு மலசல கூடம் அமைத்தல், தொற்று நோய்கள், பல் வியாதி போன்ற விடயங்களிலும் அக்கறை காட்டி வருகின்றனர்.

சிறுவர்களிடையே பயங்கரமாக போசாக்கு பாதிக்கப் பட்டுள்ளதால் உடனுக்குடன் போசாக்கும் மருந்துகளும் வழங்கப் பட்டு வருகின்றன.

## அறுபதுக்கு மேல் ஆகாது

கல்விச் சேவையில் ஈடுபட்டிருப்போரின் வயதெல்லை அறுபதுக்கு மேல் நீடிக்கப்பட மாட்டாதென அறிவிக்கப் பட்டுள்ளது.

கல்வி உயர்கல்வி அமைச்சரின் தீர்மானத்தின் பிரகாரம் 60 வயதைத் தாண்டிய அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்துவது உடனடியாக நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு கல்வி அமைச்சின் மாகாண கல்வி அலுவலகங்களிலும் 60 வயதை தாண்டிய உயர் அதிகாரிகள் ஓய்வு பெற அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது கல்வி அமைச்சின் உயர் பதவியில் இருப்போரில் பலர் 60 வயதைத் தாண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய கட்டட அமைப்பு

நுண்கலைப் பீடத்தில் நிலவும் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிர்மாணிப்பதற்கான நடடிக்கைகளை யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது.

திராவிட பாரம்பரியங்களை சித்தரிக்கும் வகையில் இக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு ஏதுவாக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மருதனாமடத்தில் அமைந்துள்ள இக் கட்டடத்தின் நிர்மாணச் செலவுகளை பல்கலைக்கழக மானியக் குழு ஏற்கனவே வழங்கியுள்ளது.

## கால எல்லை நீடிப்பு

விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெறுவதற்கான கால எல்லை மேலும் இரண்டு வருடத்தால் நீடிக்கப் படும்.

இதற்கான திருத்தச் சட்டம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

1987 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இதற்கான வயதெல்லை 45 முதல் 59 வரை ஆகும். 1989 ஆம் ஆண்டுடன் அங்கத்துவம் பெறுவதற்கான கால எல்லை முடிவடைந்து விட்டது.

எனினும் கடந்த கால நாட்டின் நிலைமையினால் அங்கத்துவம் பெறாத விவசாயிகளின் நிலையைக் கருத்திற் கொண்டு மேற்படி கால எல்லை இரு வருடகாலமாக நீடிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பேற்று திடீரென மரணமடைந்த அல்லது ஊனமுற்றவர்களுக்கு இதுவரை 20 இலட்சம் ரூபா வரை வழங்கப் பட்டுள்ளதாக கமநலச் சேவைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்துள்ளார்.

## புதிய நடவடிக்கை

கள்ளக் கடத்தல், கடவுச்சீட்டு மோசடி உட்பட வேறு பல குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காகக் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசேட குற்றவியல் புலனாய்வுப் பிரிவொன்று புதிதாக நிறுவப் பட்டுள்ளது.

கள்ளக் கடத்தலை முறியடிப்பதற்குக் கடுமையான நடடிக்கைகளை மேற் கொள்ளுமாறும், அரசாங்கத்திற்கு வரும் மானத்தைத் தரக் கூடிய சுங்கத் தீர்வையைக் கட்டாமல் தப்புகின்றவர்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்குமாறும் ஜனாதிபதி பிரேமதாஸவால் சுங்க இலாகாவிற்கும், மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் சமீபத்தில் விடுக்கப் பட்ட பணிப்புரையின் விளைவாகவே இவ் விசேட குற்றவியல் பிரிவு நிறுவப் பட்டது.

இவ் விசேட பிரிவு ஒரு ஏ. எஸ். பி யின் கீழ் இயங்கி வருகின்றது.

## குருநாகல் வரை பயணம்

வடக்கில் ஆண்களும், பெண்களும் சரளமாக மோட்டார் சைக்கிளைத் தமதுபிரயாணத் தேவைகளுக்குப் பாவித்து வருவதால் மோட்டார் சைக்கிள் விற்பனை பெருமளவில் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா போன்ற நகரங்களில் மட்டுமல்லாது குருநாகல் பகுதியிலும் மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்வதற்கு நேரடியாகப் பாவனையாளர்கள் சென்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

# உயர்வு, தாழ்வு நீங்கியதாக ஆலய வழிபாடுகள் அவசியம்

### அக்கரைப் பற்றில் காஸ்ட்ரோ அறிவுறுத்து

''ஆலயங்களில் இனிப் பூஜைகளை ஒழுங்காக நடத்த வேண்டும்'' என்று விடுத லைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு.காஸ்ரோ கேட்டுக்கொண்டுள்ளார்.

அக்கரைப்பற்று பனங்காடு சிறீ பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில், ''ஒவ்வொரு ஆலயங்களிலும் இருந்து வருகின்ற பூஜை முறைகள் இந்துக்களின் பழமையையும், வரலாற்றுப் பெருமைகளையும் எடுத்துக் கூறுபவைகளாக உள்ளன.

வணக்கத் தலங்களில் பூர்வீககால நிர்வாக ஒழுங்கு விதிகள் இருந்து வத்தாலும் இந்துக்களாக இருக்கின்ற யாவரும் உயர்வு, தாழ்வு கருதாது பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வதற்கு நாம் இடமளிக்க வேண்டும்.

காலத்தேவைகளுக்கு ஏற்ப நாம் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நம்மிடையே நல்லுறவு தோன்றா விட்டால் பலவீனப்பட்ட சமுதாயமாகத் தான் இருப்போம் என்றார்.

கூட்டத்துக்கு அக்கரைப்பற்று அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் திரு. பூ. சண்முகம்பிள்ளை தலைமை வகித்தார்.

# இன்றைய நிகழ்ச்சிகள்

## மணவாளக்' கோலத் திருவிழா

தெல்லிப்பழை சிறீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு இன்று மணவாளக் கோலத் திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 5·30 மணிக்கு உஷத் காலப் பூசை 6.00 மணிக்கு விசேட சந்தி, யாக பூஜை, சங்கு பூசை, 8.00 மணிக்கு காலை சந்தி பூசை, 8·30 மணிக்கு விசேட திரவிய ஹோமம் 9·00மணிக்கு திரவியஅபிஷேகம் 10. 00மணிக்கு மகாபூர்ணாகுதி தீபாராதனை 11.00 மணிக்கு சங்காபிஷேகம் 12. 00மணிக்கு உச்சிக் காலப் பூசை 1.00மணிக்கு அன்னதானம் பிற்பகல் 4. 30 மணிக்கு சாயரட்சை பூசை, 500.மணிக்கு வசந்த மண்டபப் பூசை திருவூஞ்சல், 6·00 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி திரு வீதி உலா வருதல்.

## வெல்லனிற் பிள்ளையார் திருவிழா

கரவெட்டி வெல்லனிற் பிள்ளையார் கோவில் திருவிழா சென்ற மாதம் முப்பதாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இன்று பூங்காவனத் திருவிழாவும் எட்டாம் திகதி தேர்த் திருவிழா ஒன்பதாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## கிராமம் தோறும் கிளைகள்

இந்து சமயத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல கிராமங்களிலும் இந்து இளைஞர் மன்றக் கிளைகளை நிறுவும் பணியில் கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

ஒரு கிராமசேவகர் பிரிவுக்கு ஒன்று என்ற ரீதியில் இக் கிளைகள் நிறுவப்பட்டு வருகின்றன்.

## ஓய்வு பெற்றார்

(நாயன்மார்கட்டு)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கோப்பாய் தெற்கு கிராமசேவையாளராகக் கடமையாற்றிய திரு. சு. யோகலிங்கம் தமது 30 வருட கால சேவையின் பின் ஓய்வு பெற்றுள்ளார்,

(33)

### விண்ணப்பப்படிவங்கள் ஆங்கிலத்தில்

# மகாசிவம் கடும் கண்டனம் திருப்பி அனுப்பக்கோரிக்கை

ஆசிரியர்கள் மாகாண சேவையிலா அல்லது மத்திய அல்லது மத்திய அரச சேவையிலா சேவையாற்ற விரும்புகிறார்கள் எனக் கோரும் விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டதை கண்டித்துள்ளார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்,

அப்படிவங்களை நிரப்பி அனுப்ப வேண்டாமெனவும், தமிழில் படிவத்தை தருமாறு கோருமாறும் ஆசிரியர்களை அவர் கோரியுள்ளார். ஆசிரியர்கள் விரும்பின் அப்படிவங்களை நிரப்பாது கல்விப் பணிமனைகளுக்கு திருப்பி அனுப்பலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் அத்துலத் முதலி, கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன் ஆகியோருக்கும், வடக்கு கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளருக்கும் திரு. மகாசிவம் அனுப்பியுள்ள மகஜரில், தமிழர் ஆசிரியர்களுக்கு தமிழில் மேற்படி படிவங்கள் கிடைக்க ஆவன செய்யுமாறு தமிழர் ஆசிரியர்கள் ஆங்கிலப்படிவங்களை நிரப்பி அனுப்பமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ். மாவட்டத்தில்

# இறந்தஆசிரியரின்குடும்பத்திற்கு மாதாந்த வேதனம் கிடைக்கும்

யாழ் மாவட்டத்தில் வன்செயல் காரணமாக இறந்த அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களின் குடும்பத்தினருக்கு, இறந்த அதிபர், ஆசிரியர்களின் மாதாந்த வேதனத்தை வழங்க உடன் நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தம்மிடம் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயளாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி வன்செயல், இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கை, இனக்கலவரம் போன்ற சூழ்நிலைகளில் அகப்பட்டு மரணமடைந்த ஆசிரியர் குடும்பத்தினர், 55 வயதுவரை வாழ்ந்து கொண்டிருந்தால்வழங்கப் படவேண்டிய சம்பளத்தை மாதாந்தம் பெறுவார்கள் எனவும், அத்துடன் விதவைகள் ஓய்வூதியத்தையும் பெறுவார்கள் எனவும் தெரிவித்த பொதுச் செயலாளர், இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் மனைவிமார் அல்லது பிள்ளைகள் மே 15 ம் திகதிக்குமுன். அவர்களுடைய சம்பளத்தைப்பெறலாமென்ற கடிதம் கைகளில் கிடைக்கவில்லையாயின் சங்கத்திடம் புகாரிடுமாறும் தெரிவித்துள்ளார்.

# ''பரந்தளவிலான போட்டி மிகுந்த பயன்பாடு தரும்''

''இலைமறைகாயாக மறைந்திருக்கும் எமது இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்கொணர வேண்டுமாயின் போட்டி நிகழ்ச்சிகள் கிராமிய பிரதேச மாவட்ட மட்டங்களில் நடாத்தப்படல் வேண்டும். போட்டிகளினால் திறமைகள் வெளிக்கொணரப் படுவதுடன் சிறந்த தலைமைத்துவம், புரிந்துணர்வு, பலருடன் பழகும் வாய்ப்பு ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடிகிறது.''

இவ்வாறு பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கூறினார்.

பளை உதவி அரசாங்க அதிபர் அ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் சி. பாப்பா, பச்சிலைப்பள்ளி அரசியற் பொறுப்பாளர் செல்வராசா, அதிபர் பொன். தில்லைநாயகம் உட்பட பலர் உரையாற்றினர்,

போட்டியில் புலோப்பளை ஸ்ரீபதி விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும், இத்தாவில் கென்னடி விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றன. (ப. 3)

### மாநகரசபை

# உறுப்பினர்மீது இருவரால் அசிட் வீசப்பட்டது

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஒருவர்மீது அசிட் வீசப்பட்டது.

வெள்ளவத்தையில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் உறுப்பினரது முகத்திலும், வயிற்றிலும்எரிகாயங்கள்ஏற்பட்டன.

அசிட் வீசிய இரு நபர்களும் சில யார் தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமோட்டார்சைக்கிளில் ஏறித்தப்பிச் சென்று விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரேமா ஆட்சி வீழ்ச்சியே என் எழுச்சி என்கிறார் வாசு

''பிரேமதாஸாவின் ஆட்சிக்கு சவால் விடக்கூடிய பலம் வாய்ந்த தொழிலாளர் அமைப்பை உருவாக்குவதே எனது இலட்சியம் அதுவே எனது இறுதி மூச்சு.''.

இவ்வாறு கொழும்பு கொட்டா வீதி மைதானத்தில் நடைபெற்ற நவசமாஜக் கட்சியின் மேதினக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், சிறிலங்காமக்கள்கட்சியைதிருமதி குமாரணதுங்க பொறுப்பேற்பதை கம்யூனிஸ்ட் கட்சி விரும்பவில்லை. பலம் வாய்ந்த தொழிலாளர் அமைப்பு ஒன்று உருவாக விருந்த சந்தர்ப்பம் இதன் மூலம் இல்லாமல் போய்விட்டது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் இம்முறையே நமது கட்சி தனியாக மேதினத்தைக் கொண்டாடுகிறது. ஐ. சோ. முன்னணியுடன் இணைந்து மேதினத்தைக் கொண்டாட திட்டமிட்டிருந்தோம். கம்யூனிஸ்ட் கட்சி எம் திட்டத்தைக் குழப்பி விட்டது,' என்றார்.

கட்சிப் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன பேசுகையில் 'யூ. என். பி அரசை விரட்டியடித்து இடதுசாரி அரசு ஒன்றை அமைக்க நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்' என்றார்.

## வானொலியில் இன்று

**05 05 90 சனி**

காலை

5.05 தோத்திரமாலை- ஸ்ரீ வெங்கடேஸ்வர சுப்பிரபாதம்
5.30 பாமாலை- சனீஸ்வரன் ஸ்தோத்திரம்
5.50 கிறிஸ்தவ, கத்தோலிக்க நற்சிந்தனை
5.55 பக்திப்பாடல்
8.00 வாத்தியம்-ரவி ரகு சகோதரர்கள்
8.15 தமிழ் மூலம்சிங்களம் நடத்துபவர் எஸ்.டீ பீரிஸ்
8.30 மாணவர்மன்றம்

பகல்

10.00 கல்வியரங்கம்
10.30 அறிவுச்சுடர்- நடத்துபவர் கே.எஸ். பாலச்சந்திரன்
11.00 இசையமுதம்
11.30 ஓடிவிளையாடு பாப்பா
11.45 அரங்கேற்றம்

மாலை

6.15 ஞானக்கோவை
6.30 இசைப்பயிற்சி
6.45 நாட்டுப்பாடல்- திலகநாயகம் போல்
7.00 குன்றின் குரல்- தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்
7.30 சர்வோதயம்

இரவு

9.20 பக்திப்பாடல்கள்-
9.30 நாடகம் புகுந்தவீடு எழுதியவர் குயில்டஸ் ஜீவன்
10.00 இசைக்கச்சேரி- ஆர். கேதீஸ்வரன்
10.45 நினைவில் நிறைந்தவை

கரை ஒதுங்கிய வாலிபர் படுகாயம்

# முல்லை, கடற்கரையில் பார்சல் குண்டு வெடிப்பு

முல்லைத்தீவு கள்ளன் கேணிப் பகுதியில் கரை ஒதுங்கிய பார்சல் ஒன்றைத் திறந்த போது அதிலிருந்த குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் இராசையா பூபாலசிங்கம் (வயது 20) என்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு கடற்கரையிலேயே இப் பார்சல் ஒதுங்கியிருந்தது.

# வாகரை நடமாடும் செயலகத்தில் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு

(மட்டக்களப்பு)

வாகரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற நடமாடும் செயலகத்தில் கடற்றொழில் திணைக்களம் சம்பந்தமான பிரச்சினைகள் பலவற்றிற்கு உடனடித் தீர்வு காணப்பட்டதாகவும், மேற்படி செயலகத்தில் சமூகமளித்திருந்த 50 வீத மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வுகாணப்பட்டதாகவும் மட்டு மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் திரு. எஸ். ரி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

கரைவலைப்பாடு உத்தரவுப் பத்திரம் கோரி விண்ணப்பித்த 10 மீனவர்களுக்கு உடனடியாக உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டதாகவும், மீனவர்களின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தாம் நேரில் கேட்டறியக் கூடியதாக இருந்ததாகவும், மீனவர்களின், காணி, ஏனைய நிவாரணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக இருந்ததாகவும் திரு. ஜோர்ஜ் தெரிவித்தார், (05)

# அமெரிக்க அரசு மீது மாஜிக் கைதிகள் வழக்கு

நான்கு அமெரிக்க சிறைக் கைதிகள் 14 இலட்சம் டாலர் நட்ட ஈடு கோரி அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

கடந்த காலத்தில் இவர்கள் சிறையிலிருந்த போது அமெரிக்க அதிகாரிகள் புகைத்து விட்ட சிகரெட் புகை மண்டலத்துள்ளிருந்து நோய் வாய்ப்பட்டதாகக் குற்றப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிறகாவது சிறைச்சாலைகளில் சிகரெட் புகை ஊடுருவாது பாதுகாப்பளிக்க வேண்டுமென மேலும் கோரப்பட்டுள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்

# திருநெல்வேலி சிவன் சம்பியன்

அரசடி ஜனசக்தி சன சமூக நிலையம் அதன் 42 வது வருட நிறைவு விழாவை முன்னிட்டு, நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 29ம் திகதி நிலைய மைதானத்தில் இடம் பெற்ற பொழுது, திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகம் உடுவில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற செற் கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பம் ஆனதும், சென் மேரிஸ் அணி வீரர்கள் தம்மை முழுமையாக ஆட்டத்தில் ஈடுபடுத்தி நிலை கொள்ளுமுன்பே சிவன் அணி சாதுரியமாக ஆடி 15:3 என்ற புள்ளிகள் கணக்கில் முதல் செற்றை இலகுவாகத் தன தாக்கிக் கொண்டது.

இரண்டாவது செற்றில் கடும் போட்டி நிலவியது. இரு அணிசளும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்ததினால் எந்தஅணி 2வதுசெற்றைப்பெறும் என்றுஎவராலும் கூற இயலாதிருந்தது. இருந்தும் ஈற்றில் சென் மேரிஸ் அணியினர் வெகு நிதானமாக ஆடி2வது செற்றை வென்றனர்.

இரு அணிகளும் தலா ஒரு செற்றை வென்று சமநிலையில் இருந்ததினால் 3வது செற்றின் ஆரம்பத்தில் போட்டி உச்ச நிலையை அடைந்தது. சிவன் அணியின் கை படிப்படியாக உயரவே சென் மேரிஸ் அணியினர் நிலை குலைந்து காணப்பட்டனர். அதனைத் தமக்குச் சாதகமாகச் சிவன் அணி பயன்படுத்திக் கொண்டு 15:9 புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தினரால் கடந்த 14ம் திகதி நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியிலும் திருநெல்வேலி சிவன் கழகமே வென்றது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

பெரும் தொகையான மக்கள் கண்டு களித்த இப்போட்டிக்கு நடுவராகத் திரு.கே,குணரெட்டினம் கடமையாற்றினார்

# அரியாலைக் கழகம வெற்றி

(விளையாட்டுத்துறை நிருபர்)

அமரர் 'வில்பிறற் றஞ்சித்' ஞாபகார்த்தமாக, றஞ்சித் வெற்றிக் கிண்ணத்துக்காக ஈச்சமோட்டை ஜங் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 29-ம் திகதி அரியாலை சன சமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கழகப் போஷகர் கப்ரின் D.A.M.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ்.உதவி அரசாங்க அதிபர் திரு. K. சபாபதிப்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்க்குப் பரிசில்களை வழங்கினார்,

இப்போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கொக்குவில் வளர்மதி கழக அணியைத் வென்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணி 12 ஓவர்களில் 4 விக்கற்றுகள் இழப்பிற்கு 51 ஓட்டங்களைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 10.5 ஓவர்களில் 4 விக்கற்றுகளை இழந்து வெற்றி இலக்கான 52 ஓட்டங்களைப் பெற்றது.

# பாடுமீன் வெற்றி

(விளையாட்டுத்துறை நிருபர்)

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விளையாட்டுக் கழக அணிக்கும், குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக 'B' பிரிவு அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டியில் பாடுமீன் அணி 3 : 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது:

அதனைத் தொடாந்து பாடுமீன் A பிரிவு அணிக்கும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 3 : 1 கோல்கள் கணக்கில் பாடுமீன் அணி வெற்றியீட்டியது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகட்கு நடுவராகவும், உதவி நடுவர்களாகவும் திருவாளர்கள் P. R தம்பிநாயகம், A. தேவராசா, G. M செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

கடந்த செய்வாய்க்கிழமை யாழ் நகரில் இடம் பெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் மேதினக்கூட்டத்தில் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் மாலினி, விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்டப் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோர் உரையாற்றுவதையும் அருகில் திரு, அன்ரன் பாலசிங்கம் திருமதி பாலசிங்கம், திரு. யோகி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

கீழேயுள்ள படத்தில் மேதினக் கூட்டத்தில் இடம் பெற்ற உடற்பயிற்சிக் காட்சியையும் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினர் மற்றும் ஊர்திகளின் காட்சிஎன்பனவற்றையும் காணலாம்.

(படம் - எஸ். ராஜ்மோகன்)





# பதினைந்து வருட காலத்தின் பின் யாழ்-மாநகரப்பகுதியில் மீள்மதிப்பீடு

(மூளாய்)

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட இருபத்தி மூன்று வட்டாரங்களிலும் அடங்கும் ஏறத்தாழ முப்பத்தி ஐயாயிரம் ஆதனங்களின் மீள் மதிப்பீடு வேலைகள் யாழ் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ் வேலையில் தற்சமயம் பதினான்கு விலைமதிப்பு பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ஆரம்ப கட்ட வேலை ஏழு வட்டாரங்களில் ஏற்கனவே முடிவடைந்துள்ளது. பன்னிரண்டு வட்டாரங்களில் ஆரம்பகட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. இறுதிக் கட்ட வேலைகளை இன்னும் ஒரு மாத காலத்தினுள் ஆரம்பிக்கலாமென திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபையினால் புதிய மதிப்பீடு செய்யப்பட்ட வரியை 1991ம் ஆண்டிலிருந்து அமுல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் முன்னரை விட 1991ம் ஆண்டு பாரிய அளவிலான பணம்கூடுதலாக வசூல்செய்ய முடியுமென மாநகர சபை அதிகாரிகளினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் மீள் மதிப்பீடு பதினைந்து வருடங்களின்பின்னர் மேற் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது, (ப-1)

## 15 வருட காலமாக வீதி புனரமைப்பு இல்லை

(நாயன்மார்கட்டு)

கோப்பாய் பிரதே சசபையின் கோப்பாய் உப அலுவலகப் பிரிவில் உள்ள பதினைந்தாம் வட்டாரமான நாயன்மார்கட்டுப் பகுதியில் வீதிப் புனரமைப்போ, சுகாதார சீர்திருத்தமோ பல வருடங்களாக மேற்கொள்ளப்படவில்லை.

பத்து வருடங்களுக்கு மேலாக இப்பகுதியிலுள்ள பாரதி ஒழுங்கை திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக சீரழிந்து கிடப்பதால் இவ்வீதியால் செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்கள் அடைவதை நீண்டகாலமாக காணக்கூடியதாக விருக்கின்றது.

பலவருட காலமாக பொது மக்கள் பாவனைக்கென கட்டிவிடப்பட்டு மக்கள் பாவித்து வந்த பொது மலசலகூடம் ஒன்று இடிக்கப்பட்ட நிலையில் சேதமடைந்து கிடப்பதை பலகாலமாகக் காணக்கூடியதாக விருக்கின்றது.

பொதுமக்கள் பாவனைக்கென கட்டப்பட்டு பாவிக்கப்பட்டு வந்த பொதுக் கிணறு ஒன்று மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் பாழடைந்து இருப்பதைக் காணக்கூடியதாக விருக்கின்றது.

இப்பகுதியில் உள்ள மக்கள் தங்கள் வீடுகளில் மலசலகூடங்கள் அமைத்தும் சுகாதாரப் பகுதியால் பெறவேண்டிய நிதியைக்கூட பெறமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (33)

## வலி.மேற்கு பிரதேச சபை நூலக வளர்ச்சி

வலி. மேற்குப் பிரதேசசபையின் கீழ் இயங்கும் பொதுநூலகங்களானசுழிபுரம்,சங்கானை வட்டுக்கோட்டை, அராலி, ஆகிய நூலகங்களுக்குமுறையே ரூ. 30,000, ரூ. 10,000, ரூ. 10,000, ரூ.10,000 ஒதுக்கப்பட்டு புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதை விட யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் ஏறத்தாழ 200 நூல்கள் வீதம் மேற்படி நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் பொதுநூலகத்தில் ''வாசகர் வட்டம்'' என்ற அமைப்பைஏற்படுத்தி மிகவும் சிறப்பான முறையில் முன்னேற்ற ஆவனசெய்து வருகின்றார்கள்.

வலி மேற்கு பிரதேச சபை விசேடஆணையாளரும், யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளரும் இந் நூலகங்களைத் திறம்படச் செயற்பட வைக்க சகல விதமான ஆக்கமும்,ஊக்கமும் நல்கி வருகின்றனர். (ப)

## சுன்னாகம் ஐக்கிய நாணயசங்க நிர்வாகிகள்

சுன்னாகம் தெற்கில் தென், சுன்னையூர் சிவபூதவராயர் ஐக்கிய நாணய சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சமாச உறுப்பினர் திரு. த. சிவரத்தினம் தலைமையில் முத்தமிழ் மன்ற மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர்கள் நிருவாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர்: திரு பொ.சிவஞானம் (சட்டத்தரணி) உப தலைவர்: திரு. செ.ஆனந்தகுமாரதாஸ் (படவரைஞர்) பொருளாளர்: திரு.பொ.கமலநாதன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர்) செயலாளர்: செல்வன் சு.சிறீகுமரன் நிருவாக சபை உறுப்பினர்களாக மூவர் தெரிவாகினர்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### ஆசிரியர் காணி வாங்க கடனுதவி வழங்கப்படுமா?

ஆசிரியர்
முரசொலி

இடருதவிக்கடன் என்ற அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வீடு திருத்துவதற்காக சம்பள முற்பணம் வழங்கப்படுகின்றது. இதேபோல் வீடு கட்டுவதற்காக வீடமைப்பு அபிவிருத்திசபை, சிக்கன கடனுதவிச்சங்கங்கள் மூலம் கடன் உதவி பெற வசதிகள் உள்ளன. மேற்கூறியவற்றில் இருந்து கடனுதவி பெறுவதற்கு காணி உறுதி சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

இதனால் சொந்தக்காணி இல்லாதவர்கள் இக்கடன்களை பெறமுடியாத நிலையில் தவிக்கின்றோம். உதாரணமாக கடந்த வருடம் கல்வித்திணைக்களத்தினால் 3000 ரூபாவுக்கான இடருதவிக்கடன் விண்ணப்பம் கோரப்பட்டபோதும் தற்போதும் வீடமைப்புக்கடனுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளபோதும், சொந்தக்காணி இல்லாதபடியினால் விண்ணப்பிக்க முடியாத பரிதாபநிலை வாடகைக்கு குடியிருக்கும் நாம் அரச காணித்துண்டுகளைப் பெறச் செல்லும்போதும். ஆசிரியர் என்ற ஒரே நோக்கில் அவ்வாய்ப்பை இழக்கின்றோம். ஆனால் 1900 ரூபா சம்பளத்தைப்பெறும் ஒரு ஆசியர் வேறு எதுவித உழைப்போ வருமானமும் இன்றி, இன்றைய வாழ்க்கைச் செலவு நிலையில் ஒருகுடும்பத்தையும் கவனித்து, காணியையும் உடன் கொள்வனவு செய்ய முடியுமா என்பது சந்தேகமே.

காணி இருந்தால்தானே வீடு கட்டவோ, திருத்தவோ முடியும். இதனால் இக்காணியற்ற ஆசிரியர்களுக்கு உதவு முகமாக, அவர்களையும் மற்றவர்களுடன் முன்னேற்றும் வகையில் வீடு கட்டுவதற்கு தேவையான காணியினை கொள்வனவு செய்வதற்கு வேண்டிய பணத்தினை வங்கிக்கடனாகவோ அல்லது வேறு கடனாகவோ வழங்கி, அவர்கள் சம்பளத்தில் இருந்து குறிப்பிட்ட தொகையினை மாதா மாதம் அறவிடுவதற்கு கல்வித் திணைக்களம் முன் வருமா அல்லது இதற்குரிய மாற்று வழியையாவது தொடர்பானவர்கள் தருவார்களா? தயவு செய்து அவர்கள் பதிலை இப்பகுதியில் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

கொடிகாமம் எஸ். சுப்பிரமணியம்

### சுழிபுரம் பொது நூலகம் அதிகநேரம் செயற்படுமோ?

ஆசிரியர்
முரசொலி

எமது கிராமத்தில் உள்ள சுழிபுரம் உப அபிவிருத்திச்சபையின் பொது நூலகம் முன்னர் காலை எட்டு மணிமுதல் மாலை ஏழு மணி வரை திறக்கப்பட்டு வந்தது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இந் நூலகம் காலைஎட்டு மணிமுதல் மாலை ஐந்து மணிவரையுமே திறக்கப்படுகிறது. அத்துடன் நண்பகலிலும் ஒரு மணித்தியாலம் மூடப்படுகிறது.

இதனால் வேலைக்குச் செல்வோரும் பாடசாலை மாணவரும் நூல் நிலையத்தை உபயோகிக்க முடியாதுள்ளது. மேலும் சில உள்ளூர் சஞ்சிகைகளும் இந்நூலகத்தில் படிப்பதற்கு வாங்கப்படுவதில்லை எனவே சம்பந்தப்பட்டோர் இந்நூலகம் முன்போல் இயங்க ஆவன செய்வார்களா?

சுழிபுரம் வி.ஈஸ்வரன்

## நம்மைச் சுற்றி நடப்பவை

கடந்த 28-ம் திகதி 'முரசொலிக்கு வந்த கடிதம்' பகுதியில் சில வாசகர்கள் எழுதிய 'கனகன் புளியடி பஸ் சேவையில் பாதை மாற்றம் எதற்கு' என்ற கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்ததல்லவா?

அரியாலை-கச்சேரி வழியாக இடம்பெற்ற இச்சேவை திடீரென செம்மணி-முத்திரைச்சந்தி வழியாகப் பாதை மாற்றப்பட்டு நடாத்தப்படுவதனால் ஏற்படும் சிரமம் காலதாமதம் பற்றி வாசகர்கள் இக்கடிதத்தில் குறிப்பிட்டு 794-ம் இலக்க கொடிகாமம்-யாழ், சேவை மீண்டும் முன்னரைப்போல கண்டிவீதி வழியே நடாத்தப்படல் வேண்டுமெனவும் கேட்டிருந்தார்கள்.

வழமைபோல் இந்த அதிகாரிகளுக்கு பிரயாணிகளின் அக்கோரிக்கை 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' அமைந்து விட்டமை ஒருபுற மிருக்க இச்சேவைபற்றி மேலும் சில தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன.

இந்த 794ம் இலக்க சேவையில் 23சிறி7357 மற்றும் ,பொறிக்கிடங்கு புகழ்' 23சிறி6896 ஆகிய இலக்கமுடைய இரு பழைய பஸ் வண்டிகளே தற்பொழுது சுழற்சி முறையில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

மிகவும் பழமை வாய்ந்த இந்தக் 'கடகடா' பஸ் வண்டிகள் அடிக்கடி இடைவழியில் 'ஸ்ட்ரைக்' பண்ணி விடுகின்றனவாம்.

கடந்த புதன்கிழமை காலை இந்த பஸ்களில் ஒன்று செம்மணிச் சுடலைக்கு அருகில் நகர மறுத்து விட்டது. சாரதியும், காப்பாளரும் முயன்றும் முடியவில்லை இதனால் வேறு வாகன வசதியற்ற அந்த செம்மணிப் பாதையில் பயணிகள் பட்டபாடு சொல்லுந்தரமன்று.

'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' இதற்குப்பிறகு சரசதாலைலை, கனகன்புளியடி, மட்டுவில், மந்துவில் (794ம் இலக்கத்துக்குரிய) மக்கள் இந்த 'உலகம் சுற்றும்' பஸ்ஸில் ஏறத்தயங்கி வருகிறார்கள் - இடைவழியில் நின்றுவிடும் என்பதால்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கனகன்புளியடியிலிருந்து தற்பொழுது காலையில் மினிபஸ் சேவையொன்றும் ஆரம்பமாகிவிட்டதாம்,

'பஸ்சேவை ஒழுங்காக நடக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியம்' என சதா கூக்குரலிடுகிறார்கள் அதிகாரிகள் ஆனால் மக்களின் அபிமானத்திற்குரிய பஸ் சேவையொன்று வெறுப்புக்குள்ளாகி எப்படி சீரழிவை எதிர்நோக்குகின்றது என்பதற்கு மேலுள்ள சம்பவம் ஒன்றே நல்ல உதாரணம்.

இனியாவது அதிகாரிகள் சற்று திருந்திக் கொள்வார்களா.

★ கிறிசான்

## சுவையான செய்திகள்

### எடையைக் குறைக்கும் பொலிஸார்

பொதுவாகப், பருத்த உடலையுடையவர்களை அழகானவர்கள் பட்டியலில் நாம் சேர்ப்பதில்லை. ஆனால் பாகிஸ்தானில் தடித்த உடலையுடையவர்களுக்குத் தண்டனை காத்திருக்கிறதாம்! ''ஷேப்'' எதுவுமின்றி மாமிச மலையாய்த் தொந்தியும் தொங்கும் தொப்பை சகிதமாக இருக்கும் பொலிஸ்காரர்களுக்குப் பாகிஸ்தானில் 6 வாரம் கொடுத்து எடையைக் குறைக்கச் சொல்லியிருக்கிறார்களாம்! இனி இடுப்பின் சுற்றளவு 34 அங்குலத்திற்கு மேல் இருக்குமானால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமாம். உத்தரவுப்படி, நூற்றுக்கணக்கான பாகிஸ்தானியப் பொலிஸார் தங்களது வேலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எடையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கவ்.

### நாவல் பழத்தின் மகத்துவம்

மன்னர் ஜஹாங்கீர்திராட்சைக்கு அடுத்தபடியாகஇரசித்துஉண்டபழம்நாவல்பழமாம்.நாவல்பழத்தில்ஏராளமானஇரும்புச்சத்தும்,விட்டமின்-சியும்அடங்கியுள்ளது. நீரிழிவையும் சேர்த்துப் பல வியாதிகளுக்கு ஆயுர்வேத வைத்தியம் நாவல்பழம் மற்றும் அதன் கொட்டையையும் (பொடியாக்கப்பட்டது) சிபார்சு செய்கிறது. பண்டைய யூனானி வைத்தியமும் வெப்பத் தாக்கத்திற்கு இது நல்லது எனக் கூறுகிறது. இதில் இருந்து எடுக்கப்படும் வினிகர் மிகச் சிறந்தது. தூய்மையானது எனக் கருதப்படுகின்றது. எங்கே . இம்முறை நாவல் பழ சீசனை ஒரு கை பார்ப்போமா?

### எயிட்ஸ்காரனின் தலைநகரம்

தென் ஆபிரிக்காவில் எயிட்ஸ் ஏராளமான நபர்களைப் பாதித்திருப்பதால் யோகானஸ்பர்க் எயிட்ஸ் வியாதியின் தலைநகரமாக மாறியிருக்கிறது. 1999 இற்குள் ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள பாதிப் பேரின் உயிரை இந்த வைரஸ் குடித்து விடுமென உலக சுகாதார அமைப்பின் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

## பிளக்கும் தலைவலி ..

1000 பவுண்டு சாம்பல் பையினின்றும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கலாம். 50 பவுண்டு சக்தியை மாத்திரமே ஒவ்வொருநாளும் செலவிட்டு மிகச் சிக்கனமாக வாழ்வார்களானால் தங்களிடத்தில் தாங்கள் பட்ட கடனைத் தீர்க்க ஒரு மாதமாகலாம். ஆனால் அவர்கள் நாட்கள் செல்லச் செல்லக் கடனில் மூழ்கி விடுகின்றார்கள், வயது முதிர்ச்சியடையும் பொழுது, இரவில் பெற்று கொள்ளும் நித்திரையின்றி குறைவாகவே சக்தியை மென்று கொள்ள முடிகிறது.

இவ்வாறு நீண்ட காலமாக உடல்கொண்டிருக்கும் களைப்பும் நாட்பட்ட மன இறுக்கமும் நாட்பட்ட தலைவலியாகி விடுகிறது. தலைவலி. யைத் தடுக்கும் சிகிச்சைமுறையைக் கையாளும் மருத்துவர்கள், தங்களதுநோயாளிகளை இதை நன்றாகப் புரிந்து கொள்ளச் செய்தபோது, சக்தி நிறைந்த பையானது ஒரு கம்பியின் உதவியால் நோயாளியின்தலையை நோக்கிக் குறிவைக்கப்பட்டுள்ளதுப் பாக்கியினது விசைவில்லின் மீது மாட்டிவைக்கப்பட்டது.

பையானது மன இறுக்கத்தால் அதிகமாக நிரப்பப்படும் போது அது விசைவில்லை. அழுத்துகிறது. எனவே தலைவலி ஆரம்பமாகிறது 1000 தடவைகள் இவ்வாறு விசைவில் இழுக்கப்படும் போது துப்பாக்கி மகிழ்ச்சியால்' நிறைகின்றது.

அழுத்தம் இலேசாக இருந்தாலுங்கூட வெடித்துவிடுகிறது, சாதாரணமாக 40 வயதில் துப்பாக்கி வெடிப்பதற்கு 75 பவுண்டுகள் தேவை. ஆனால் 15 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து தலைவலி இருக்குமானால் குறைவான பவுண்டுகள் இருந்தாலும் வெடித்து விடுகிறது.

எனவே டாக்டர்கள் ஒவ்வொரு புதிய நோயாளியிடமும் 2 காரியங்களைக் செய்ய முற்படுகிறார்கள், முதலாவது நோயாளியின் உதவியோடு, அவர் சுமந்து கொண்டிருக்கும் மன அழுத்தத்தைக் குறைக்கிறார்கள். இரண்டாவதாக, மருந்துகளின் மூலமாக, விசை அழுத்தத்தை எளிதில் விட்டுக் கொடுக்காதபடி விறைப்பாக்குகிறார்.

அதிக அழுத்தம் வந்தால் தான் அசைந்து கொடுக்குமளவிற்குச் செய்கிறார். 50 பவுண்டு அழுத்தம் அதை அசைக்க முடியாது. அல்லது அதற்குமேற்பட்டு இருந்தால் தான் வெடிக்கும்.

உதாரணமாக, மிதமிஞ்சி விரிந்துள்ள அடர்த்தி மிகுந்துள்ள இரத்த நாளங்களை மருந்து இறுக்கமுடியும் தலையையும் கழுத்தையும் சுற்றிலும் இறுக்கமாக விறைத்து புண்போன்று நொந்துபோயிக்கும் தசைகளைத் துவளச் செய்யவேண்டும். எரிச்சலடைந்திருக்கும் நரம்புகளுக்கு இதமூட்டப்படவேண்டும். வெப்ப சிகிச்சை, மஸாஜ் மற்றும் கழுத்தை நிமிர்த்தும் பயிற்சிகளும் விசை அழுத்தத்தை விறைப்பாக்க உதவுகின்றன. இரத்தநாளங்கள், தசைகள், நரம்புகள் ஆகிய உடலின் மூன்று பகுதிகள் மாத்திரமே தலைவலியால் பாதிக்கப்படும் போது வேதனை அடைகின்றன. எனவே, இவைகளின் மீது இருக்கும் அழுத்தம் விலத்தப்பட்டால் தலைவலி நின்றுபோகும்

மன அமைதியூட்டும் மாத்திரைகள் தலைவலிக்காரர்களுக்கு உதவுகின்றன. ஆனால் அவைகளால் அசௌகரியமான ஆபத்து நிறைந்த பக்க விளைவுகளும் ஏற்படுவதுண்டு. நோயாளியின் தன்னியல் நிகழ்வுப் பழக்கத்தை இந்த மாத்திரைகள் உடைக்க உதவி செய்யும்வரை, இவை அருமதிப்புள்ள, ஆதரவு கொடுக்கும் முடவன் கொலைப் போன்று பயன்படுகின்றன.

மாத்திரை ஒன்றை எடுத்து உடலை சற்று ஒரு நாளைக்குத் தளர்த்தி, சக்திப்பையிலுள்ள குறையை நிறைவாக்கும்போது எல்லாம் நல்லபடியாகவே யிருக்கும். ஆனால், பாதிக்கப்பட்டவரிடம் புத்தம் புதிய 100 பவுண்டு சக்தி தற்சமயம் கையிருப்பில் இருக்கிறது என்ற. கொள்கையின்படி இவை பயன்படுத்தப்படக் கூடாது. இறுதியில், குணமடைதல் அவர் கரங்களில் தான் இருக்கிறது.

இந்தத் தலைவலியைத் தடுக்கும் சிகிச்சை முறையை உங்களுக்கு நீங்களே ஆரம்பிக்கலாம். எவ்வாறு செய்வது

நாளைக்கு என்ன வேலை செய்யப்போகிறீர்கள் என்ற காரியத்தை விபரமாக, துல்லியமாக இன்று இரவே எழுதிவைத்துக் கொள்ளுங்கள் எழுதிவைத்துள்ள அனைத்தையுமே ஹெர்குலஸால்கூட செய்துமுடிக்க முடியாது என்பதையும் நன்கு புரிந்து கொள்ளவேண்டும், எல்லாவற்றையுமே முடித்துவிடவேண்டுமென்று முயற்சிப்பீர்களானால் பெரும் மனச் சுமையோடும் ஏமாற்றத் தோடுமே அலுவலகத்தை விட்டு வெளியேற நேரிடும். ஒரு தலைவலியைப் பெற்றுக்கொள்ள இத்தகைய பரிசோதனை ஒன்றைச் செய்தாலே போதுமானது.

2. இன்று எதையெல்லாம் செய்துமுடித்தீர்கள் என்பது குறித்து ஒரு பட்டிலைத் தயாரியுங்கள். எதைச் செய்யாமல் தவிர்த்திருக்கலாம் என்பதையும் எண்ணிப்பாருங்கள், மேலும் எவ்வளவு அதிகமாகச் செய்ய விரும்பினீர்கள் என்பதையும் சிந்தியுங்கள்.

3. இப்பொழுது உங்களிடம் இரண்டு பட்டியல்கள் இருக்கின்றன. அடுத்தநாளில் மன இறுக்கமின்றி சௌகரியமான முறையில் எதையெல்லாம் செய்யமுடியும் என்று திட்டமிடுகின்றீர்களோ அவைகளை ஒவ்வொன்றாக எழுதுங்கள். பின்னர் இந்தப் பட்டியலைப் பாதியாகக் குறையுங்கள்

எது முக்கியமோ அவைகளை உங்களால் செய்ய முடியுமென எண்ணிச் செய்யும் போது, நீங்கள் ஒரு சமநிலையோடு வாழ ஆரம்பித்து விடுகிறீர்கள். இவ்வாறு உங்களுக்கு வரும் தலைவலிகளின் எண்ணிக்கை சரிய ஆரம்பித்து இறுதியில் ஒருவேளை உங்களை விட்டு ஓடியே போய்விடும்!

இந்தத் தலைவலிக்கான சிகிச்சை மிக எளிமையானதாகத் தோற்றமளிக்கலாம். ஆனால் நீங்கள் மீண்டும் உங்களாது பழைய பழக்கங்களுக்கே திரும்பச் சென்று விடுவீர்களானால் மீண்டும் இந்த அபாயத்தைச் சந்திக்க வேண்டிய நிலை எப்போதுமே இருக்கிறது என்பதை மறக்கக்கூடாது. எனவே, உங்களது சக்தியை உறிஞ்சும் பயங்கரமான கட்டத்தை நீங்கள் சந்திக்கும்போது பின்வரும் மூன்று கேள்விகளை உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

1. நான் உண்மையிலேலே உடல்நலத்தோடு வாழவிரும்புகின்றேனா?

2. எனது சத்தியைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்ட நிலையில் நான் வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பேனா?

3. இந்த வேலை சம்பந்தமாக ஏற்படப்போகும் சுமையை, உணர்வு வேகத்தை, செலவிடப்போகும் சக்தி ஆகியவைகளைத் தாங்கும் தகுதி எனக்கு இருக்கிறதா?

நாளைக்கும் தொடர்ந்து பெறப்போவது உடல் நலமா அல்லது உடைக்கும் தலைவலியா? விடையும் அங்கேயே இருக்கிறது.

நன்றி; நல்வழி

### மண்டேலா தெ. அரசுடன் பேச்சுவார்த்தை

# முப்பது வருடக்கசப்புணர்வு மாறி மலருமா புது உறவு

முப்பது வருடங்களாக அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸூம் தென்னாபிரிக்க அரசும் தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் குழுவின் தலைவர் திரு. நெல்ஸன் மண்டேலாவும், அரசுக் குழுவில் ஜனாதிபதி திரு. எப். டபிள்யூ கிளார்க்கும் உள்ளனர்.

'இருசாராரும் மனம் விட்டுப் பேசும் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றனறன.' என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் நான்கு மணித்தியாலங்களுக்கு நீடித்தது.

ஏழு அம்சத்திட்டம் பற்றி பேச்சுவார்த்தைகள் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது-

வெள்ளையர்களுக்குப் போல் கறுப்பு இனமக்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் மனப்பான்மையோடு ஜனாதிபதி திரு. கிளார்க் இப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## சித்திரத் தேர்

மண்டைதீவுதிருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்தேரைப் பிரபல சிற்பவல்லுநர்கலாகேசரிஆ. தம்பித்துரை தலைமையிலான சிற்பவல்லுநர்குழு அமைத்து வருகிறது. இதற்கான நிதியைப் பொதுமக்கள் வழங்கி வருகிறார்கள்.

(ப-12)

## அகளங்கனுக்கு கௌரவம்

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் கடந்த சித்திரை வருடபிறப்பன்று 14-ந் திகதி தொடங்கி 24-ம் திகதி வரைக்கும் தொடர்ச்சியாகப் பதினொரு நாட்களுக்கு, அகளங்கன் மகாபாரதத் தொடர் விரிவுரையைத் திறம்படச் செய்தார்.

மகாபாரத விரிவுரையின் இறுதி நாளன்று, அவருக்கு, பட்டமளித்து, பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி "பாராட்டுப்பா " வழங்கி கௌரவித்தனர்.

ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு. பொ நல்லையா அகளங்கனின் பாரத விரிவுரை கேட்கக் கேட்கத் தெவிட்டாது. இது போன்ற செவியின்பத்தை நாம் எப்போதுமே அனுபவித்ததில்லை, எனத் தமதுரையில் கூறி அகளங்கனின் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து வவுனியா தெ. த. பி. கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சு. வீரசிங்கம் அகளங்கனை மிகவும் பாராட்டிப் பேசினார்

பதினொரு நாட்களில் மகாபாரதத்தை ஆழ்ந்து அனுபவித்து எமக்கு கதைத் தொடராக, பல தத்துவங்களுடன் எடுத்துரைத்தார், இது மகத்தான செயல் என்பதில் இருகருத்துக்கிடமில்லை எனக்கூறிப் பொன்னாடை போர்த்தினார்

வவுனியா பெரும்பாக உத்தியோகத்தர் திரு. த. இந்திரராஜா அகளங்கனின் சமய, இலக்கியப் பணிகளை வியந்து பேசி மகாபாரதத் தொடர் விரிவுரையின் சிறப்பினை எடுத்துரைத்து அவருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

வவுனியா இந்து மாமன்றத்தின் சார்பில் எழுத்தாளர் திக்வயல் தர்மகுலசிங்கம் அகளங்கனை பாராட்டிப்பேசி "காவியமாமணி" என்ற பட்டத்தை வழங்கினார்.

அவர் தமதுரையில், அகளங்கனின்சாதனைமகத்தனது மகாபாரதத்தை இவ்வாறு அற்புதமாக விரிவுரை செய்யலாம் என்பதை அகளங்கன் நிரூபித்து காட்டியதுடன் கதாபாத்திரங்களின் பெயர் விபரங்களை மிக்க ஞாபக சக்தியுடன் கூறியது வியப்புக்குரியது என்று கூறி பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார். மற்றும் பலரும் பேசினர்.

### இம்மாதம் 8ம் திகதி

## இத்தாவில் மின்னிணைபபு வேலைகள் ஆரம்பம்

கிராமிய மின்னிணைப்புத் திட்டத்தின்கீழ் இத்தாவில் பகுதிக்கு ஐந்து இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட. மின்னிணைப்பு வேலை இம் மாதம் எட்டாம் திகதி கிளிநொச்சி அரசாங்கஅதிபர் திரு. கே. மாணிக்கவாசகரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சு. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் பாப்பா பச்சிலைப் பள்ளி அரசியற் பொறுப்பாளர் செல்வராசா உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப.3)

## கைதிகளுக்குப் பர்மாவில் பலத்த சித்திரவதை

### -சர்வதேச மன்னிப்புச்சபை

பர்மாவில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை பர்மா மீது குற்றம் சுமத்தியுள்ளது.

அரசுக்கு எதிராகக் குரலெழுப்பிய ஆயிரக்கணக்கானோர் மற்றும் முதியவர்கள், மாணவர்கள் போன்றோர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சித்திரவதைக்குப் பாதுகாப்புப் படையினரே பொறுப்பாக இருந்துள்ளனர்.

தலைகீழாகத் தொங்க விடுதல், உடைந்த கண்ணாடித் துகள்கள் மீது தவழப் பண்ணுதல், காயங்கள் மீது உப்பு அல்லது மிளகாய்த் தூள் தடவுதல் போன்ற சகிக்க முடியாத கொடூரங்களுக்குக் கைதிகள் இலக்காகியுள்ளனர் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது

## புலிகளின் பெயரால் லஞ்சம் மின்கம்பத் தண்டனை

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரைக் கூறி ஒருவரிடம் ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்ற தாகக் கூறப்படும் நபர் ஒருவர் மூன்று மணித்தியாலங்கள் மடத்தடியில் உள்ள மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தார். விடுதலைப் புலிகளின் பெயரால் கைலஞ்சம் பெற்றமைக்காக இத் தண்டனை வழங்கப்பட்டுள்ள தெனக் கூறும் வாசகம் எழுதப்பட்ட அட்டை ஒன்றும் இவரது கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது,

### இலங்கையில் பதிவு செய்யப்பட்ட

## மோட்டார் வாகனம் 5,87,585 இதில் மோட்டார் சைக்கிள் 2,13,441

இலங்கை முழுவதும் உள்ள பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 87, ஆயிரத்து585 என்று அண்மையில் வெளியிடப்பட்டபோக்குவரத்து ஆணையாளர் அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது.

இந்த அறிக்கையின் படி மோட்டார் சைக்கிள்கள் மட்டும் 2 இலட்சத்து 13,441 எனவும், மோட்டார் கார்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 47837 எனவும், லொறிகள் 92998எனவும் தனியார் போக்குவரத்து பஸ்கள் 244 08 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நண்பகல் சரக்கு ரயில் நேரத்தில் மாற்றம்

மட்டக்களப்பு-மாகோ நண்பகல் சரக்கு ரயில் மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரத்தில் மாற்றம் ஏற்படவிருப்பதாக ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் ரயில் பயணிகள் நலன் கருதிக் கொழும்பிலிருந்து யாழ். இரவுத் தபால் ரயில். இணைப்புப் பெறுவதற்கு வசதியாகவே இந்நேர மாற்றம் அமையும்.

பி.ப 2.15 க்குப் புறப்படும் மேற்படி ரயில் 10.55 க்குப் பின்பு தான் மாகோ சென்றடைவதால் யாழ். தபால் ரயில் இணைப்பைப் பயணிகள் தவற விடுவது குறிப்பிடத் தக்கது.

# வெடிமருந்து தட்டுப்பாடு சல்லிக் கற்களின்றி கட்டடவேலை பாதிப்பு

சல்லிக் கற்களின் தட்டுப் பாட்டினால் யாழ் மாவட்ட கட்டட வேலைகள் பாதிப்ப டைந்து வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

கூடுதலாகப் பணம் வழங்கு பவர்களுக்கு சல்லிக்கல் விற்பனையாளர்கள் கற்களை வழங்கிவருதால்புனர்நிர்மாண வேலைகள்வீதி அபிவிருத்திண வேலைகள் பெரிதும் பாதிப்ப டைந்துள்ளன.

சல்லிக்கற்கள் சுண்ணாம்புக் கற்களில் இருந்தே பெறப்படு கின்றன. கிளிநொச்சிக்கு அப் பாற்பட்ட இடங்களில் கிற னைட் கற்களே இவ் வேலைக ளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கிறசர் கற்களின் தட்டுப்பா ட்டை நீக்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் இடம் பெற்றது.

சுண்ணாம்புக் கற்களை உடைக்கவைக்கும்வெடிமருந்து பற்றாக் குறையாலேயேபோ தியளவுகிறசர்கல்லைஉற்பத்தி செய்ய முடிந்துள்ளதாக உற் பதிபாளர்கள் தெரிவித்தனர்,

## சோலை வரி அறவீட்டில் மாநகர சபை முன்னேற்றம்

இந்த வருடத்திற்கான கலாண்டு சோலை வரி அற வீட்டில் யாழ் மாநகர சபை முன்னேற்றம் கண்டுள்ளது.

சோலை வரியில் கடந்த காலங்களில் யாழ் மாநகர சபைக்கு 90 லட்சம் ரூபா நிலுவையாக உள்ளது. இந்த நிலுவையைக் குறைப்பதற் கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.


இவ் வருடத்திற்கான காலாண்டு நிலுவையாக 25 லட்சத்து 47 ஆயிரம் ரூபா யாழ் மாநகர சபையில் சோலை வரியாக செலுத்தப் பட்டுள்ளது.

ஒரு முழு வருடத்திற்கான முழுச் சோலைவரியின் பெறு மதி சுமார் 35 லட்சமாகும். (03)

## லொறி கடத்திய தமிழ் இளைஞர் நொச்சியாகமத்தில் கைது

துப்பாக்கிமுனையில் லொறி ஒன்றினைக் கடத்திச் சென்ற மூன்று தமிழ் இளைஞர்கள் நொச்சியாகமப் பொலிஸா ரால்கைது செய்யப்பட்டனர்.

சம்பவம்பற்றி சொல்லப்படு வதாவது, யாழ்ப்பாணம்,கிளி நொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் லொறிஒன்றினை வாடகைக்கு அமர்த்தினார்கள். சிலாபத் திற்குச் செல்லும் வழியில் சார தியையும், கிளினரையும் மரம் ஒன்றுடன் கட்டிவைத்து விட்டு லொறியை கொள்ளையடித் துச் சென்றனர்.- பின்னர் கட் டுக்களை அவிழ்த்துச் சென்ற சாரதியும்-கிளினரும் கொடுத் புகாரைத் தொடர்ந்து நொச் சியாகமப் பொலிஸார்லொறி யைக் கடத்திச் சென்ற மூன்று இளைஞர்களையும் பிடித்த னர்.



நேற்று 'முரசொலி'யில் வெளியான நாலுகால் கோழிக்குஞ்சு என்ற செய்தியில் குறிப் பிட்ட கோழிக்குஞ்சையே மேலே காண்கின்றீர்கள். நெடியகாட்டு சின்னக்கண்டு என்பவ ரது வீட்டில் வளரும்இந்தஇரு தென்னங்கன்றுகளும் ஒரேதேங்காயில் இருந்து வெளி வந்தவை. (39)

## இறைச்சிக்கடைகள் இடமாற்றம்

யாழ் பண்ணைப்பகுதியில் தரை மட்டமாக்கப்பட்டுள்ள இறைச்சிக் கடைகள் விரை வில் திருத்தப்படவுள்ளன. இது திருத்தப்பட்டதும் தற் போது நகரில் இயங்கி வரும் இறைச்சிக்கடைகள் பல இட மாற்றப்படவுள்ளது.இக்கடை களை திருத்துவதற்கான நட வடிக்கைகளை யாழ் மாநகர சபை மேற்கொண்டுள்ளது.03

## சிவமகாராஜா எம்.பி.ராஜினாமா

ஈழவர் ஜனநாயகமுன்னணி யின் யாழ் மாவட்ட எம். பி திரு.சிலமகாராஜா தமதுபார ளுமன்ற அங்கத்துவ பதவியை இராஜினமாச் செய்துள்ளார்.

தமது செந்தக் காரணங்க ளை முன்னிட்டே பதவியை இராஜினமாச் செய்வதாகக் குறிப்பிட்ட' க்டிதத்தை அவர் யாழ்ப்பாணத்திலிருந்து சபா நாயகருக்கு அனுப்பியுள்ளார்.

## சிறுவன சடலமாக

(காரைநகர்)

நேற்று முன்தினம் கட லில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்த முருகதாஸ் (வயது 14) என்ற சிறுவன் காணாமல் போனான். அதன் பின்னர் நேற்று காலை இவ னது சடலம் கரையொதுங்கி யது.இப்பரிதாப சம்பவம் காரைநகர் வடக்கு கடலில் இடம்பெற்றது.(ப.13)

## நல்லூர நூலகத்தில் பத்திரிகைப் பகுதி

எதிர்வரும் 15ம் திகதிமுதல் நல்லூர் பொதுசன நூலகத் தில் பத்திரிகைகள் வாசிக்கும் பகுதி ஆரம்பிக்கப்படவுள்ள தாகயாழ்மாநகரசபைஆணை யாளர் திரு. வி.பிபாலசிங்கம் தெரிவித்தார். (03)

## யாழ் கல்வித் திணைக் களத்தில் டொமினிக்

## மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நேர்மையுடன் பணியாற்றுக

(வண்ணார்பண்ணை)

''மனச்சாட்சிக்குக் கட்டுப் பட்டு நேர்மையுடன் பணி யாற்றுங்கள்.கல்வித் திணைக் களத்தினர் ஏனைய திணைக்க ளத்தினருக்கு, பாடசாலைக ளுக்கு எடுத்துக் காட்டாகச் செயற்பட வேண்டும்.ஆசிரி யர்களின் பிரச்சினைகளை அனுதாபத்துடன் அணுகித் திருப்திகரமான தீர்வினைக் காண முற்பட வேண்டும்.''

என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யாழ்மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக் நேற்றுக் (4.5.90) காலை யாழ் கல்வித்திணைக் கள அதிகாரிகள்,ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் குறிப் பிட்டார்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு.இரா. சுந்தரலிங்கம் தல மையில் நடைபெற்ற இக்கூட் டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உபசெயலாளர் செல்வி.சுந் தரி உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

### உணவு ..

கவும் இருக்கக் காணப்படு கின்றன.

ஏழை மக்களின் நலன்கருதி வழங்கப்படும் இவ்வுணவுப் பொருட்களில் தரக்குறைவும், விலையேற்றமும் இருப்பது, அவர்களுக்குக் கூடுதலான பாதிப்புக்களை ஏற்படுத்து மென்பதால் முத்திரைகளுக் கென வழங்கப்படும் பொருட் களின் பூரண பயனையும் பொதுமக்களே அனுபவிக்கக் கூடிய விதத்தில் ஏற்ற ஒழுங் குகளைச் செய்யவேண்டு மென்று, கோரும் மகஜர் ஒன்றினை யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர், யாழ் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி யாழ் அரசாங்க அதிபர்அவர் களுக்கு,யாழ் மாநகர சனச மூக நிலையங்களின் சமாசம் அனுப்பிவைத்துள்ளது. (47)

### 60 வயது ..

அறிய வந்ததாவது:

1984–ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் தனது மகனும், மருமகனும் விசா ரணையின் பொருட்டு கொண்டு செல்லப்பட்டு விடு தலையாகவில்லை. இவ்விரு வரும் உயிருடன் இருப்பதாக இவர் இதுவரை காலமும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஆனால் கடந்த28-ம் திகதி வன்னி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரிடம் இம் மூதாட்டி சென்று விசாரித்தவேளையில் மேற்படி இருவரும் மரண மான செய்தி இம் மூதாட் டிக்கு கிடைத்துள்ளது.

### மின்

க்கு சுட்டிக்காட்டியுள்ளன.

எவ்வாறாயினும்வடக்குகிழ க்கு மாகாண சபை கடந்த ஜனவரி மாதம்முதஇல்லங்கை மின்சார சபைக்கு மின்சாரக் கட்டனத்தை செலுத்தி வரு வதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இலங்கை மின்சார சபைக்கு வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந் து சுமார் 10 கோடி ரூபா மின் சார கட்டணமாக செலுத்தப் பட வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர்...

தற்போது இக்கோவைகள் கோட்டக் கல்வி அலுவலகங் களிலே பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இக்கோவையில் இருந்து ஆவணங்கள் எடுக் கப்பட்டு பல மோசடி நட வடிக்கைகளில் பலர் ஈடுபட்டு வருவதாக கிடைத்த புகார் களை யடுத்தே மேற்படி நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அதனை அடுத்து மகசீன் சிறைச்சாலையில் உள்ள தமிழ் இளைஞர்களை அரசு விடுவிக்க வேண்டும் எனக் கோரி தனது உண்ணா விர தத்தினை ஆர்ம்பித்துள்ளார்.

இச் செய்தி அறிந்து விடு தலைப் புலிகள் அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க முற்பட்ட வேளை அதற்கு மூதாட்டி மறுப்புத் தெரிவித் துள்ளார் எனத் தகவல் அறிந்தவட்டாரங்கள் கூறின. (11)

### கசிப்பு

மக்கள் முன்னணித் தலைவ ருக்குத் தெரிவிப்பதாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாண தெங்குபனம் பொருள் கூட் டுறவுச் சமாசச் செயலாளரு மான திரு க. நடராசா விடுத் துள்ள அறிச்கையில் குறிப் பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையினால் பத்தாயிரத்துக்கும் மேற் பட்ட குடும்பங்களின் வருமா னமும், எதிர்காலமும் பனை வளத்தின் ஒரு பகுதியும் உறு திப்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார் திரு க. நடராசா தனது அறிக் கையில் குறிப்பிட்டுள்ளதா வது:-

எமது இயற்கை மூலவள மான பனைவளத்தை வீணா கத் தறித்து அழிக்கும் நட வடிக்கையையும் உடனடியா கத் தடை செய்யும்படி விடு தலைப் புலிகள் மக்கள் முன் னணியைக் கோரியுள்ளேன். கடந்த சில வருடங்களில் வீணாகத் தறித்து அழிக்கப் பட்ட ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட பனை வளத்தை ஈடுசெய்யும் விதத்தில் வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதி னும் 20 லட்சம் பனம் விதை கள் நாட்டுவதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது''

வெளிநாட்டு மூலதனம் மூலம் பனம் பழத்தை அடிப் படையாகக் கொண்ட மாபெரும் தொழிற்சாலை ஒன்றை வடமராட்சியி லும், ஏற்றுமதிக்கான தும்பு, பிரஷ் தொழிற்சாலை ஒன்றை மன் னாரிலும் நிறுவும் நடவடிக் கைகள் வெற்றியளித்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார் (36

### நாளைய...

கரணவாய் மத்தி துன்னாலை மேற்கு, துன்னாலை தெற்ல துன்னாலை கிழக்கு, தப்புகு ஆகிய கிராம சேவை அலுவது கர் பிரிவிற்கே இந்த நிவால ணம் வழங்கப்பட வுள்ளனதுர

தொழில்முயற்கிக்கான நன். கொடைப்பணமும்வீடுகட்டுவ தற்கான நன்கொடைப்பண மும் யாழ் மக்கள் வங்கி பிர தான வீதிக்கிளையில்நாளைய தினம் வழங்கப்பட வுள்ளன.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 250 குடும்பங் களுக்கு தொழில் முயற்சிக் கான நன்கொடையும்

சாவகச்சேரி, பருத்தித் துறை, கரவெட்டி உதவி அர சாங்க அதிபர் பிரிவு களுக்கு வீடுதிருத்துவதற்கான நன் கொடையும் வழங்கப்படவுள் ளன. (3)

### மே தின...

## ஊர்திகள் பற்றிய போட்டி முடிவுகள்

1ம் இடம் வலிகாமம், மாண வர் அமைப்பு 2ம் இடம் ஊர் காவற்றுறை (மலையகக் காட்சி) 3ம் இடம் சுன்னாகம் M.P.C.S. 4ம் இடம் நாவாந் துறை கடற்றொழிலாளர் சங்கம் 5ம் இடம் துறையூர் கடற்றொழிலாளர் சங்கம்

## சான்றிதழ்பெறுவோர்

6ம் இடம் கோணாவளை, செல்வநாயகபுரம் கிராம முன் னேற்றக் சங்கம் 7ம் இடம் அச்சுவேலி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் 8ம் இடம் வட பிராந்தியமினி பஸ் சேவைச் சங்கம், யாழ்ப் பாணம். 9ம் இடம் பாஷை யூர் மக்கள் 10ம் இடம் உரும் பிராய் மக்கள்.

இ பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 05-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது